

# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## சகல தீமைகளையும், நன்மையாக மாற்றுவார்!

யோபு 42:2-ல் "தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர்!" என கூறியது ஆஸ்தி இழப்பு! பிள்ளைகள் இழப்பு! சரீர சுக இழப்பு! போன்ற "துன்பத்தின் சகலமுமேயாகும். இத்தனை இழப்புகளை இழைத்திட சாத்தானுக்கு தேவன் அனுமதித்ததற்கு காரணம்: 1. யோபுவின் உத்தம விசுவாசத்தை வெளிப்படுத்த 2. இவை அனைத்தையும் திருப்பித்தந்திட தேவனால் முடியும்! என்பதுமேயாகும்.

ரோமர் 8:28-ல் "அவரில் அன்புகூருகிறவர்களுக்கு 'சகலமும் நன்மைக்கு' ஏதுவாக நடக்கிறது" என்ற வசனத்தை யோபுவோடு ஒப்பிடுவது நமக்கு மிகுந்த உற்சாகம் அளிக்கிறது! சகல 'தீமைகளையும்' தம்முடையவர்களுக்கு 'நன்மையாக' மாற்றி நடத்துவார்! இவ்வாறு மாற்றும், "அவர் செய்ய நினைப்பது, ஒருபோதும் தடைபடாது!" (யோபு 42:2). அல்லேலூயா! *-tr*

பெட்டகம் 38 | ஏப்ரல் 2022 | பரல்கள் 04



## நம் விசுவாசம் ஒழியாதிருக்க இரகசியம்!

வானமண்டல பொல்லாத தீயஆவியின் போராட்டம் 'கோரப்பற்களோடு'... வெளவால் போன்ற 'கிறீச்' சத்தத்தோடு, பேதுருவை தாக்கவில்லை! அதுபோன்ற, இழிவான பிரமைக்குரிய அச்சம் 'சீமோன்களுக்கு' இருப்பதில்லை! அந்த தாக்குதல் "ஒரு வேலைக்கார பெண்... ஒரு சாதாரண மனிதன்" ஆகிய இவர்கள் 'நீ அவருடைய ஆள்தானே!' எனக்கூறிய தற்செயலான சம்பாஷணையில் நடந்தது!

இயேசு கண்டதுபோல், இந்த சாதாரண வேலைக்கார பெண்ணிற்கு பின்பாகவே, தன்னைப் புடைக்க வந்த 'சாத்தானை' பேதுரு காண அறியாதிருந்தான்! ஆகிலும், இயேசு 'சீமோனுக்கு' ஜெபித்தாரல்லோ... அந்நிகழ்ச்சியில், 'அவன் மறுதலித்தான்' என்பது பெரிய காரியமே அல்ல ... அவனது 'கோதுமைமணியான விசுவாசம்' புடைக்கப்பட்டு பதருக்குள் போகவில்லை! என்பதே பெரிய காரியம்!! ஆம் பேதுரு ஜெயித்தான்! எல்லாம் 'சீமோனுக்காக பரிந்துரை செய்த' இயேசுவின் ஜெபமே, அந்த இரகசியம்! 'இதை விசுவாசித்திடும்' அனைவருக்கும் இந்த ஜெயம் உண்டு!

*-Ed*

### 2022 'பரலோக பொக்கிஷங்கள்'

வருட சந்தா ரூ.150/- தயவுசெய்து உடன் M.O செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு ஏப்ரல் 20-ம் தேதிக்குள் அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் 3பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.125/- அயல்நாடு ஒரு பிரதி ரூ.900/- அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள் 'புதிது' என்று குறிப்பிடவும். நன்றி!

ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!
சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch
A/c no: **502087685** Ifsc code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள்
207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India
Cell : 9843049935 Ph (O) 0452 - 7966138
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : paralogapokkishangal

## “ஊற்றுத்தண்ணீரே பொங்கிவா!” நமது விசுவாச பாடல்!

இஸ்ரவேல் ஜனங்கள், பாலைவனத்தின் சுடுமணலில் பயணம் செய்த காலம் அது! ஜனங்கள் தங்கள் தாகத்தைப் போக்கிக்கொள்ள, தண்ணீர் நிலை கண் எட்டிய தூரம் வரை காணப்படவில்லை. நாவறண்ட அந்த வறட்சி நேரத்தில், மக்கள் தாகத்தால் துவண்டு விழுந்தார்கள்! அவர்களை நடத்தி வந்த தாசன் மோசேயைப் பார்த்து “ஜனங்களை, ஒரே இடத்திற்கு வரும்படி கூடி வரச்செய்! நான் அவர்களுக்குத் தண்ணீர் கொடுப்பேன்!” என கர்த்தர் கட்டளையிட்டார்! (எண்.21:16). கர்த்தர் கட்டளையிட்டபடியே, அந்த வறண்ட பாலை மணலான இடத்தில் ஜனங்கள் கூடிவந்தார்கள். “**நான் உங்களுக்குத் தண்ணீர் கொடுப்பேன்!**” என்ற கர்த்தரின் வாக்கை, மோசே மூலமாய் கேட்ட இஸ்ரவேலர்கள், பூரண விசுவாசத்தோடு, தங்களுக்கு கட்டளையிட்டபடியே, வனாந்திர மணலை வட்டவட்டமாக உட்கார்ந்து தோண்டத் துவங்கினார்கள்.

தங்கள் கோல்களைக் கொண்டு, ‘தண்ணீர் வரும்’ என்ற வாய்ப்பே இல்லாத சுடு பாலைவனத்தில், இஸ்ரவேல் ஜனங்கள் மிகுந்த நம்பிக்கையோடு “கர்த்தர் தண்ணீர் தருவார்!” என்ற விசுவாசத்தோடு தோண்டினார்கள்.

**அவர்கள் ஆழமாய் தோண்டும்போதே, பாடிக்கொண்டு தோண்டினார்கள்! ஆம், தண்ணீர் வந்தபிறகு பாடுவது எளிது.... ஆனால், பாலைவனத்தில் சுடு மணலைத் தோண்டும்போதே பாடினார்கள்! அவர்களின் பாட்டு நம் விசுவாசத்தை அனல் மூட்டுவதாய் இப்போதும் உள்ளது!**

“ஊற்றுத் தண்ணீரே, பொங்கி வா! ஊற்றுக் கண்ணே, உன்னைக் குறித்து நாங்கள் யாவரும் சேர்ந்து பாடி கொண்டாடுகிறோம்!” என, கரைபுறண்ட உற்சாகத்தோடு பாடிக் கொண்டே தோண்டினார்கள். அப்போதுதான், ஓர் ஆச்சரியம் நிகழ்ந்தது! “சல சலவென்ற” சத்தத்தோடு தண்ணீர் ஊற்றுக் கண்ணிலிருந்து பொங்கிப் பொங்கி வந்தது! ஊற்றை நிரப்பிய தண்ணீரை, பல்லாயிரமான இஸ்ரவேலர்களும் அவர்களது ஆடு,

மாடு, ஒட்டகங்களும் மகிழ்ச்சியுடன் குடித்து திருப்தி அடைந்தார்கள்! மணலுக்கு கீழே 'ஓடையும்' அந்த ஓடைக்கு கீழே மறைந்திருந்த நீரோடைகளையும் இஸ்ரவேலர்கள் கண்டு, ஆனந்தம் கொண்டார்கள்!

**அன்பார்ந்த தேவ ஜனமே, இந்த சௌந்தர்யமான காட்சியே, உங்கள் வனாந்திர ஜீவியத்தில் 'நிலைத்திருக்கும் காட்சியாய்' மாறுவதாக! எவ்வளவு வனாந்திர சுடு- மணலிலும் ஆசீர்வாதமான ஊற்றுக்கண் பொங்கி வழிந்தோடும் காட்சி!**

அதற்குரிய இரகசியத்தையே இங்கு நாம் கண்டோம். ஆம் 'விசுவாசம் நிறைந்த' துதியின் கீதம், மிக வறட்சியான அவர்களின் ஜீவியத்திலிருந்த அனைத்து தாகத்தையும் தீர்த்துவிட்ட அதிசயம்! 'சுடுமணலைச் சுற்றி அமர்ந்து' விசுவாச பாடலைப் பாடினார்கள்..... அதுவும், 'ஊற்றுத் தண்ணீரே, **பொங்கி வா!**' என்றல்லவா விசுவாசப் பாடலைப் பாடினார்கள். அதே சமயம், "கர்த்தர் வாக்குரைத்துவிட்டார்" என்ற உற்சாக விசுவாச கோல்கொண்டு, நம்பிக்கையோடு பாடித் தோண்டினார்கள்! இன்றும், **நம் விசுவாச – துதி** நம் வனாந்திர ஜீவியத்தில் 'நீரூற்றைத் திறந்திடும்' அல்லவா? இதற்குப் பதிலாக, தேவனிடம் முறுமுறுப்பதும், கோபம் கொள்வதும் நமக்குத் தகுதியானதல்ல!

இன்னும் அதிகமாய், அனேக சூழ்நிலைகளில் 'ஜெபம் கூட' நம் ஆசீர்வாத ஊற்றை திறந்திட போதுமானது அல்ல! ஆர்ப்பரிப்பும், துதியும் இல்லாத ஜெபத்தில் விசுவாசம் பிறப்பதில்லை!

**எந்த வறண்ட நிலையிலும், தன் ஆர்ப்பரிப்பை, துதியை இழக்காத கிறிஸ்தவர்களை நாம் காண்பது, எத்தனை பரவசமாயுள்ளது! அப்படியே, நாம் அனைவரும் வாழ்ந்து குடும்பமாய், சபையாய் சுகித்திருக்கக்கடவோம்!**

விசுவாச - துதியைப்போல், ஆண்டவருக்கு மிகவும் பிரியமானது வேறெதுவுமில்லை! "துதியின் கீதம்" நம்மிடத்தில் உண்டோ? என கண்டுபிடிப்பதற்கே 'விசுவாச பரீட்சை' நமக்கு ஏற்படுகிறது! அவர் செய்த பல நன்மையான ஈவுகளை 'எண்ணிப் பார்த்து, எண்ணிப்பார்த்து' துதிப்பவர்களே, தங்களுக்கு ஏற்படும் பாலைவன வறண்ட நிலையிலும் துதித்துப் பாடிட மறக்கமாட்டார்கள்! **நம்மை அண்டி வரும் ஆசீர்வாத ஊற்றுக்களின் "மாறுவேடமே" சோதனை!** என்பதை அவரது பக்தர்கள் நன்கு அறிவார்கள். ஆகவே, ஊற்றுக்கண்ணை காண்பதற்கு முன்பாகவே, அவர்களால் ஜெய-தொனி துதியைப் பாடிட முடியும்!

ஓர் இனிய ஆங்கிலப்பாடலின் கருத்தை சற்று கவனித்து தியானியுங்கள்: "என் வறண்ட ஆத்துமாவே, உன் விடுதலைக்காக

*நீண்ட காலமாய் காத்திருக்கிறாய்! ஆத்துமாவே, இப்போது ஓர் நற்செய்தி கேட்பாயாக 'நீ விரும்பிய விடுதலை' இப்போதே உனக்காக காத்திருக்கிறது...... அதைப் பாடி மகிழ்ந்து சுதந்தரிப்பாயாக! 'என் கட்டுகள் முறிக்கப்படட்டும்' அப்போது நான் பாடுவேன்! என நீ காத்திருப்பது பிழையல்லவோ? பார் அங்கே, உன் ஆண்டவர் உன்னை 'இப்போதே' மகிழ்ச்சியின் விடுதலை கீதத்தால் உன் உள்ளத்தை நிறைத்துவிட, வாஞ்சையோடு காத்திருக்கிறார்! பாடு, உன் விசுவாச துதிபாடலை கெம்பீரித்துப்பாடு! இதோ, பொங்கி வரும் ஊற்றுத்தண்ணீரை உன் கண்ணார காண்பாய்!" ஆ, அல்லேலூயா!*

*- Mrs.சார்லஸ் கஃவ்மென்*

---

## 'சுயாதீன' போர்வையில், சத்தியம் அவமதிக்கும் காலம் இது!

*தாங்கள் சுயமாய் செல்ல விரும்பும் வழியை தடை செய்து, அடைத்து நிற்கும் சத்தியங்களைப் "பிழையென" அறிவித்து, தங்கள் சுய விருப்பங்களை நிறைவேற்றத் துடிக்கும் கொடிய காலம் இது! கட்டளையின் 6-வது பிரமாணமான "விபச்சாரம் செய்யாதிருப்பாயாக!" என்ற முக்கிய பிரமாணம்கூட இன்று தேய்வடைந்து, "அது எல்லாம், பழைய காலம் என மழுப்பி.... நாகரீக சமுதாயம் என்ற தூண்டிலைக் கடித்து" தங்கள் இச்சைகளை நிறைவேற்றும் புதிய கலாச்சாரம் கிறிஸ்தவத்தில் நுழைந்துவிட்டது!*

*இதன் விளைவாய், இன்றைய "இணையதள ஆபாச படக் காட்சிகள்" நம் கிறிஸ்தவப் பிள்ளைகளைக் கூட ஆட்டிப் படைக்கிறது! வயதிற்கு வராத பிள்ளைகள் கூட "பாலியல்" பேசும் கொடிய காலம்! அன்றும் இக்கொடிய செயல்கள் இருந்தபோதிலும், இன்று அந்த தீய - சக்கரம் பன்மடங்கு வேகமாய் சுழலத் துவங்கிவிட்டது!*

**ஒரு காலத்தில் "பிரமாணங்களே ஒரு தேசத்தை கட்டி எழுப்புகிறது!" என்ற பொன்மொழிகள் மாறி, "பிரமாணங்களை அல்லது வேத வசனத்தை கண்டும் காணாமல் ஒதுக்குவதே இன்றைய வாழ்விற்கு ஏற்புடையது!" என்ற கதியாகிவிட்டது!**

*இவர்களின் அதிகாரபூர்வமான இலக்கு என்னவெனில் "தாங்கள் விரும்பியதை நிறைவேற்ற வேண்டும்!" என்ற ஒரே நோக்கம்தான்! இதையெல்லாம் சகித்துக்கொண்டு, அவைகளை தங்கள் சபைகளில் அனுமதிக்கும் கிறிஸ்தவ தலைவர்களும் உண்டு! இவர்களைக் கோழையென்பதா? கொடியவர்கள் என்பதா? என தெரியவில்லை!*

*"சத்தியத்தை கண்டும் காணாமல் ஒதுக்கும்...." இந்தக் கொடிய ஆவி, நம் கிறிஸ்தவப் பிள்ளைகளை ஆட்கொண்டு, அவர்களின்*

*பெற்றோர்களுக்கு கீழ்ப்படிவதையும், அடங்கியிருத்தலையும் புறக்கணிக்கும் தீய காலமாய் மாறிவிட்டது! கேட்டால், "பிரமாணம் ஒரு பரிசேயத்துவம்..... நாங்கள் வேண்டுவது ஜனநாயகம்!" என கொக்கரிக்கத் துவங்கிவிட்டார்கள்!*

**"சுயாதீனம்" வேண்டுமா? ஆம், நிச்சயம் வேண்டும்! ஆனால், இவ்வாறு "பிரமாணங்களைத் தூக்கி எறிந்துவிட்டு" சுய-வழி இச்சைகளை நிறைவேற்றுவதற்கல்ல இந்த சுயாதீனம்!! வேதபூர்வ திசையையே மாற்றும் கொடிய சுயாதீனம் இவர்களுக்கு ஒரு கேடா?**

*ஒன்றில் துவங்கும் இவர்கள்.... ஒன்றன்பின் ஒன்றாய் "பிரமாணத்துவத்தை" அவமதித்து "சுயாதீன" சுழல்காற்றில் தங்கள் மனம்போன போக்கில் தாறுமாறாய் போய் கொண்டிருக்கிறார்கள்! தங்கள் "போதைக்குக்கூட" சிறிய அளவில் துவங்கி, அது எல்லாம் ஒன்றுமில்லை எனக் கூறி.... போதைமருந்து வரை சென்றுவிடுகிறார்கள்! என்ன.....மதுபான தடைச் சட்டமா? அப்படியொரு பிரமாணம் வேண்டாம், வேண்டவே வேண்டாம், நாங்கள் சுயாதீனப் பிரியர்கள் என, தாங்களும் கெட்டு பிறரையும் கெடுக்கும் தவறான முன்னோடிகள்! எங்கும் நாகரீக வாழ்வின் மோகம் தலைவிரித்து ஆடும் காலமாகிவிட்டது! ஆகவே, வேத வசன வாசிப்பும், அதற்கு கீழ்படிவதும் ஏதோ சடங்காச்சாரமாய் மாறிவிட்டது!*

*யார் இவர்கள்? கிறிஸ்தவர்கள் என்ற பெயரில், தங்கள் இச்சையின் போக்கில் செல்ல விரும்பிய சுக- ஜீவிகள்! வேறு யாரும் அல்ல..... இவர்களே அந்திக்கிறிஸ்துக்கள்! ஏனெனில் அந்திக்கிறிஸ்துவின் மறுபெயரே "பிரமாணம் ஏதும் இல்லாதவன்!" என்பதுதான்.*

*இவைகளை எழுதும் நான் யார்? 'உத்தம கிறிஸ்தவத்தின் முழு இரத்தமும்' கொண்டவன்! பல்லாண்டு கிறிஸ்தவ வாழ்வின் அனுபவத்தில் சம்பூர்ண சமாதானமும், நிறைந்த மகிழ்ச்சியும், அனைத்து சூழ்நிலைகளுக்காய் நன்றி சொல்வதையும் கொண்ட பாக்கியம் நிறைந்த கிறிஸ்தவன்! இந்தப் பாக்கியம் எனக்கு எப்படி கிடைத்தது என்றா கேட்கிறீர்கள்? கேளுங்கள்: "வேதத்தில் உள்ள அனைத்து ஆவியின் ஜீவ பிரமாணங்களுக்கும் பெருமகிழ்ச்சியுடன் கீழ்ப்படிந்து, அதை மனதார விசுவாசித்து, நெஞ்சார அன்புகூர்ந்து, அனைத்தையும் கொள்ளைப் பொருளாய் கண்டடைந்தவன்!". பல்லாண்டு வாழ்ந்த என் அனுபவ சாட்சியை நீங்கள் நம்பி.... தேவ பக்தியான விருப்பங்களுக்கும் தீர்மானங்களுக்கும் உடனே திரும்புங்கள்!*

*- எலியாஸ் அஸ்லாக்சன்*

## 'தைரியமிக்க' ஊழியர்களைக் கொண்டே, எழுப்புதல் வரும்!

இன்றுள்ள சபைக்கு அவசர தேவையாயிருப்பதெல்லாம் "தைரிய நெஞ்சுடைய தேவ மனிதர்களே" தேவை! ஆனால், இன்று பொதுவாய் பேசப்படுவதெல்லாம் எழுப்புதல் தேவை! பரிசுத்தாவியின் புதிய அபிஷேகம் தேவை! இந்த இரண்டும் தேவையென தேவனுக்குத் தெரியாதா? பின் எது வேண்டும்? ஆம், தேவன் ஒருபோதும் எலிகளுக்கு உயிர் மீட்சியின் எழுச்சியைத் தரமாட்டார்! அதேபோல, பரிசுத்தாவியின் அபிஷேகம் இருக்க வேண்டிய இடத்தில் 'மென்மையான முயல்களை' கொண்டு வந்து நிறுத்த மாட்டார்! ஆத்தும உயிர்மீட்சியின் போர்களத்தில் 'தங்களை முழுவதும் செலவு செய்திட' வாஞ்சிக்கும் மனிதர்களையே தேவன் தேடுகிறார். இவர்கள், இந்த உலகம் அவர்களின் காலடியில் கொண்டு வந்து கொடுத்த அனைத்து கவர்ச்சிகளுக்கும் ஏற்கெனவே மரித்தவர்கள்.

**சூழ்நிலைகளின் நெருக்கத்தினிமித்தம், இவர்கள் யாதொன்றும் செய்திட துணிய மாட்டார்கள். இவர்களை நெருக்கி உந்துவதெல்லாம், ஒன்று, அவர்கள் நெஞ்சத்திலிருந்து உருவானதாயிருக்கும்! அல்லது, பரத்திலிருந்து உந்தப்பட்ட ஏவுதலாயிருக்கும்!**

*நம்முடைய சபை பிரசங்க பீடங்களில், மீண்டுமாய் தீர்க்கதரிசிகள் வேண்டுமென்றால் 'பூரண சுயாதீனம்' கொண்ட புருஷர்களே தேவை! இவர்கள் தங்களின்* **பிரபல்யமான 'ஸ்தாபன சின்னங்களை'** *ஏந்திக் கொண்டு நிற்கும் கோழைகளாய் இருக்கமாட்டார்கள். இந்த சுயாதீன புருஷர்கள் தேவனுக்கும் மனுக்குலத்திற்கும் உயர்ந்த நோக்கத்தோடு செயலாற்றுவார்கள். இவர்கள், தங்கள் சிற்றாலயத்திற்கு உள்ளாகவே சுற்றிச் சுற்றி வரும் தேங்கி நிற்கும் புருஷர்கள் அல்ல! இவர்கள், பயத்தை முன் வைத்து யாதொரு தீர்மானமும் எடுக்க மாட்டார்கள்! யாரையும் பிரியப்படுத்துவதற்காக எந்த பணிகளையும் மேற்கொள்ள மாட்டார்கள்! பொருளாதார லாபத்திற்காக எந்த ஊழியமும் செய்ய மாட்டார்கள்! மார்க்க சடங்குகளை செய்வதற்கு ஒருபோதும் துணிய மாட்டார்கள்! எவ்வித பிரபல்யமும் எவ்வித புகழ்ச்சியின் ஆர்வமும் தங்களை ஆட்கொள்ள அனுமதிக்க மாட்டார்கள். இன்று தேய்ந்து நிற்கும் 'சுவிசேஷ சபையினர்' செயலாற்றிக் கொண்டிருப்பதெல்லாம் 'தாங்கள் ஒன்றும் செய்யாமல் இருக்கிறோம்' என்று யாரும் சொல்லிவிடக் கூடாதே*

*என்ற அச்சமே காரணமாயிருக்கிறது! இவர்களின் செயலாற்றும் முயற்சிகளின் காரணங்கள் 'பிறரின் அபிப்பிராய பயமேயன்றி' உயர்ந்த காரணங்கள் எதுவுமில்லை!*

*உண்மைதான், ஜனங்களின் அபிப்பிராய உந்துதலுக்காக இவர்கள் ஊழியம் செய்தார்களேயல்லாமல், 'யெகோவா தேவனின் குரல் கேட்டு' பணியாற்றவில்லை!*

உண்மையுள்ள சபை, ஜனங்களின் எதிர்ப்பார்ப்பை பூர்த்தி செய்வதற்காக "கிறிஸ்துவின் - படை முயற்சி மேற்கொண்டதில்லை" அந்த சபையின் முன் நிற்கும் தலைவர்கள், தேவனின் குரலைக் கேட்டு முழு சுயாதீனத்தோடு முன் நோக்கிச் செல்ல தீவிரம் கொண்டிருப்பார்கள். தங்களுக்கு யாதொரு ஜனங்கள் ஆதரவு இருக்கிறதோ, அல்லது இல்லையோ? என்பது அவர்களுக்கு ஒரு பொருட்டல்ல. மாறாக, கர்த்தருடைய சித்தம் அறிந்து செய்து முடிப்பார்கள்! அதுபோன்ற சபையிலுள்ள ஜனங்களும் இந்த உத்தம ஊழியர்களை தீவிரமாய் பின்பற்றுவார்கள். ஊழியத்தின் விளைவு சில சமயங்களில் ஜெயமாய் இருக்கலாம்! ஆனால், அநேக சமயங்களில் வசை மொழிகளும், உபத்திரவங்களுமே அவர்களுக்கு எஞ்சி நிற்கும்!

**எது எப்படி இருந்தாலும், அவர்களுக்கு கிடைக்கும் ஆதரவான பிரதிபலன் என்னவென்றால் "தவறான ஓர் உலகில், சரியானதை செய்து முடித்தோம்!" என்ற திருப்தியேயாகும்.**

ஒரு உத்தம தேவ மனிதனின் ஓர் மாறாத அடையாளம் என்னவென்றால் "தெய்வ அன்பேயாகும்!" கிறிஸ்துவுக்குள் சுயாதீன மான ஊழியன் தேவனுடைய சத்தத்தைக் கேட்டு பழகியிருப்பான். அந்த குரல், பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளின் இருதயங்களை உடைத்த, நம் ஆண்டவர் இயேசு தன் ஆத்துமாவை நசுக்க ஒப்புக்கொடுத்த, அப்போஸ்தலர் கண்களில் கண்ணீரை வரவழைத்த **தேவ அன்பின் குரலுக்கே** அவர்கள் மனப்பூர்வமாய் கீழ்ப்படிவார்கள்.

தேவனுக்கு சுயாதீனமாய், ஊழியம் செய்திட்ட புருஷர்கள், ஓர் அடக்குமுறை சர்வாதிகாரியாய் இருக்க மாட்டான்! அல்லது தேவனுடைய சுதந்திரத்தை, தன் விருப்பத்திற்கு ஆட்டிப்படைக்கிறவனாயும் இருக்க மாட்டான். பயமும், சுய-உறுதி இல்லாதவர்களே, ஜனங்களை தங்களின் கால்களுக்கு கீழாக கொண்டு வர துடித்த கோழைகளாய் சபை சரித்திரத்தில் கண்டிருக்கிறோம்.

எதையோ பாதுகாக்க வேண்டிய சில ஆர்வங்களும், தங்கள் தலைமை ஸ்தானத்தை தக்க வைத்துக் கொள்ள விரும்பும்

*விருப்பங்களுமே.... தங்கள் சுய பாதுகாப்பிற்காக தங்களைப் பின்பற்றுகிறவர்களை 'அச்சாரமாய் வைத்துக்கொள்ள' துடிக்கிறார்கள்.*

*கர்த்தருக்கு முன்பாய் வாழும் சுயாதீன ஊழியர்களோ, இதுபோன்ற இழிசெயலை ஒருபோதும் செய்திட மாட்டார்கள். இவர்களுக்கு, பாதுகாக்கப்படுவதற்கென ஒன்றுமே இருப்பதில்லை! 'அடைந்தே தீர வேண்டும்' என்ற சுய- இலட்சியமும் இருப்பதில்லை! எதிரிகள் என்ற பயம் இவர்களுக்கு சிறிதும் இருப்பதில்லை! இதுபோன்ற காரணங்களால், ஜனங்களுக்கு முன்பாக தைரியமாய் இருப்பார்கள்! ஜனங்கள், அவர்களை பின்பற்றினால், நல்லதுதான்! அப்படி இல்லையென்றாலும், அந்த ஊழியன் 'தனக்கு அருமையானது என பிடித்துக்கொள்ள' எதையும் வைத்திருக்க மாட்டான்.*

**அவன் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், புறக்கணிக்கப்பட்டாலும், ஜனங்களைத் தொடர்ந்து அன்பு கொண்டு சிநேகிப்பான். அவன் ஜனங்களுக்கும் தேவனுக்கும் நடுவில் நிற்கும் பரிந்துரை ஊழியத்தை 'மரணம் ஒன்று மாத்திரமே' அமைதிப்படுத்த முடியும்!**

*சுவிசேஷ ஊழிய தாகம் கொண்ட கிறிஸ்தவம் பிழைத்திருப்பதற்கு, மேற்கண்ட சரியான தேவ புருஷர்களே தேவனுக்குத் தேவை. சத்தியத்தை மனதார ஓங்கிப் பேச தைரியமற்ற கோழைகளை, உத்தம கிறிஸ்தவம் புறக்கணிக்க வேண்டும். "முன் நாட்களில் காணப்பட்ட உத்தம தீர்க்கதரிசிகளையும், இரத்த சாட்சிகளையும் உருவாக்கிய குணாதிசயங்கள், மீண்டும் சபைக்கு வரவேண்டும்" என்ற தாழ்மையுள்ள ஜெபத்தை சபை வேண்டுதல் செய்யக்கடவதாக! அதுபோன்ற, உத்தம கூக்குரல் ஜெபத்திற்கு தேவன் நிச்சயம் செவிகொடுப்பார்!*

*ஆகிலும், மீட்பை கொண்டு வரும் தீர்க்கதரிசிகளும், உயிர் மீட்சியாளர்களும் தைரிய நெஞ்சுடைய தேவ புருஷர்களாகவே இருக்க வேண்டும்!*

**அவர்கள் எப்போதும் தேவன் இருக்கும் பக்கமே நிற்கிறபடியால், தேவனும் அவர்கள் பக்கமாய் எப்போதும் நிற்பார்!**

*அவர்கள் கிறிஸ்துவின் உடன் ஊழியர்கள்! பரிசுத்தாவியின் கரத்தில் உள்ள வல்லமையான ஆயுதங்கள்! இதுபோன்ற புருஷர்களை தேவ ஆவியானவர் மெய்யாகவே அபிஷேகித்திருப்பார்! அவர்களின் ஊழியங்கள் மூலமாக, அநேகரை தேவன் அபிஷேகம் செய்வார்! நீண்ட காலமாக தாமதித்த எழுப்புதலை அவர்கள் மூலமாய் அனுப்பி வைப்பார்! அந்த நாள், நமக்கு வெகு சமீபமாயுள்ளது!*

*- A.W.டோசர்*

## பிசாசானவன் என்னை நேரடியாய் தாக்கி, தோல்வியுற்றான்!

**நா**ன் குதிரையிலிருந்து விழுந்த விபத்தை இதற்கு முன்பே குறிப்பிட்டிருந்தேன். அதிலிருந்து நான் எவ்வாறு அற்புதமாய் காக்கப்பட்டேன் என்பதையும் குறிப்பிட்டிருந்தேன். நான் திரும்பவும் ஜெனிவா வந்த பிறகு, பிசாசானவன் "**என்னுடைய நேரடி சத்துருவாக**" என்மீது கோபம் கொண்டு தாக்கத் துவங்கினான். 'அந்தரங்கத்தில்' அவன் என்னைத் தாக்கிய அனைத்திலும் தோல்வியுற்றான். இப்போதோ 'வெளிப்படையாக வந்து' என்னைத் தாக்கும் எதிரியாக நின்றான்!

ஒரு நாள் இரவு, நான் சற்றும் எதிர்பாராத விதத்தில் **பூதகரமான பயங்கர தோற்றம்** எனக்கு முன்பாக கடந்து சென்றது. அது ஒரு அன்புள்ள முகத்தைப்போல் தோன்றினாலும், அதன் முகம் மங்கலான ஊதா நிற ஒளியில் தோன்றியது. அந்த பயங்கர தோற்றம், எனக்கு முன் தோன்றி சீக்கிரத்தில் கடந்து சென்று விட்டது. அது என்னவாயிருக்கும்? என்று என்னால் நிதானிக்க முடியவில்லை. ஆகிலும், என் ஆத்துமா வழக்கம்போல் அமைதியான சூழலில் இளைப்பாறி இருந்ததைக் கண்டேன். சிறிதும் பாதிக்கப்படாத என் மன உறுதியில், அந்த கொடூர தோற்றம் மீண்டும் எனக்குத் தோன்றவில்லை!

> *நான் வழக்கம்போல், நடு இரவு 12 மணிக்கு ஜெபிக்கத் துவங்கிய போது, என் படுக்கை அறையில்* ***பயங்கர பீதி தரும் ஓசைகள்*** *கேட்டன. இதையெல்லாம் சாத்தானின் தாக்குதல் என அறிந்த நான் படுத்துவிட்டேன். படுத்து கண்ணயர்ந்த சிறிது நேரத்தில், ஒவ்வொரு $\frac{1}{4}$ மணிநேர இடைவெளியில் ஒரு மணி நேரம் நான் படுத்திருந்த கட்டில் குலுங்கியதைக் கண்டேன்! அதுமாத்திரமல்லாமல், அந்த அறையின் கண்ணாடி சட்டங்கள் வேகமாய் படபடத்து திறந்து கண்ணாடிகள் உடைந்தன! பெருங்காற்றோ என விளக்கை கொளுத்திப் பார்த்தால், வெளியே எப்போதும்போல் காற்று வீசாமல் அமைதியாய் இருந்தன! இவ்வாறு ஒவ்வொரு நாள் அதிகாலையிலும் சம்பவித்தது.... ஆகிலும் நானோ, சிறிதளவு பயம்கூட என் இருதயத்தில் எழாதிருந்ததைக் கண்டேன்!*

பயங்கரமான ஓசை கேட்ட போதெல்லாம், என்னுடைய மெழுகுவர்த்தியை கொளுத்திப் பார்த்தேன். இன்னும் மோசமாய், உடைந்த ஜன்னல் கண்ணாடிகளின் துண்டங்கள் ஆங்காங்கு சிதறிக் கிடந்தன.

**இத்தனை நேரடியான தாக்குதலுக்குப் பிறகும், யாதொன்றிற்கும் நான் பயப்படவேயில்லை என்பதை பிசாசு கண்டு கொண்டான்! அதற்குப் பிறகு, உடனே என் இடத்தை விட்டு விலகி, நேரடி தாக்குதலை என்மீது பிசாசு தொடரவில்லை!**

*இப்போதோ* **'சில மனிதர்களின் மூலமாய்'** *என்னை அவன் எதிர்த்தான். அது அவனுக்கு சாதகமாய் கைகூடியதைப்போல் தோன்றியது. எப்படியெனில், பிசாசு தீர்மானித்து ஏவியதையெல்லாம் இவர்கள் செயல்படுத்தினார்கள்! இன்னும் அதிகமாய், எனக்கு எவ்வளவு மோசமாய் தீங்கு செய்தாலும் 'அதை, இறைவனுக்கு ஆற்றும் தொண்டு!' என அவர்கள் நம்பும்படி தூண்டுதல் செய்தான்.*

*எங்கள் கன்னிமாடத்திலுள்ள சகோதரிகளில் ஒரு சகோதரி, எங்கள் மாடத்திற்கு வந்து உபதேசிக்கும் ஒரு உபதேசியிடம், ஒரு வித நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக்கொண்டாள். அந்தப் பெண் மிகவும் அழகுள்ளவள். அவளை நான்தான் என்னோடு அழைத்து வந்திருந்தேன். அவளை வைத்து இந்த உபதேசி செய்த முதல் காரியம் என்னவென்றால்,* **எனக்கு விரோதமான பகையை தூண்டியதுதான்!** *அவள் என்மீது தொடர்ந்து நம்பிக்கையாயிருக்கும் பட்சத்தில், அவள் அந்த உபதேசியோடு கொண்டிருக்கும் நெருக்கத்தை தடை செய்வேன் என்பதை அந்த உபதேசி அறிந்திருந்தார். இச்சம்பவ காலத்தில், அந்த உபதேசி போதனை வகுப்புகள் நடத்திக் கொண்டிருந்தார். அந்த உபதேசி தான் அடிக்கடி அங்கு வருவதற்கு வாய்ப்பு உண்டாகும்படி, நான் குறிப்பிட்ட அந்த கன்னிமாட பெண்ணின் முழு நம்பிக்கையும் பெற்றுவிட மிகுந்த ஆர்வமாயிருந்தார்.*

*நான் முன்பு குறிப்பிட்டப்படி, ஜெனிவா பிஷப் அவர்கள், 'தந்தை லா-கோம்பே' அவர்களை எங்கள் கன்னிமாடத்து இயக்குனராய் நியமனம் செய்திருந்தார். நடைபெற இருந்த வேத பாட வகுப்புகளுக்கு, ஆவிக்குரிய முதிர்ச்சி கொண்ட தந்தை லா-கோம்பே அவர்களும் வருவதாயிருந்தது! அவரை, இந்த கன்னியாஸ்திரீ சந்திப்பது நலமாயிருக்கும் என நான் எண்ணினேன். அவள் என்மீது முன்பிருந்தே பொதுவான மரியாதை வைத்திருப்பாள். ஆகவே, வரவிருக்கும் வயதான லா-கோம்பே அவர்களுக்கு சில ஏற்பாடுகள் செய்யும்படி கூறியிருந்தேன். அரை - மனதோடு நான் கூறியதை அவள் ஏற்றுக்கொண்டாள். நான் அவளிடம்* **"இருதயத்தில் தேவனோடு பேசும் அந்தரங்க ஜெபத்தை"** *அறிமுகப்படுத்தி பேசினேன். அவ்வித ஜெபத்தை ஒரு பழக்கமாய் வைத்துக்கொள்ள உற்சாகப்படுத்தினேன். அதற்கு, தந்தை லா-கோம்பே அவர்களின் வரவு மிகுந்த உதவியாயிருந்தது!*

**தேவனோடு பேசும் அந்தரங்க ஜெபத்தைப் பழகிக் கொண்ட இந்த கன்னியாஸ்திரீ, ஆண்டவருக்குத் தன்னை முழுவதுமாய் ஒப்புக்கொடுத்துவிட்டாள்! ஆண்டவர் அவளுடைய உள்ளத்தில் அப்படியொரு சிறந்த மாற்றத்தையும் கொண்டு வந்துவிட்டார்!**

*அதுமுதற்கொண்டு 'தன்னை காத்துக்கொள்ள' ஆர்வம் கொண்டு, இந்த உபதேசியின் ஆரோக்கியமற்ற நெருக்கத்தை உறுதியுடன் தடுத்து விட்டாள்! இந்த செயல், அந்த கபடு எண்ணம் கொண்ட உபதேசிக்கு மிகுந்த கோபத்தை தூண்டியது. தந்தை லா-கோம்பேயின் மீதும், என் மீதும் அந்த உபதேசியின் வெறுப்பு பன்மடங்காய் மாறியது. அதற்குப் பிறகு எனக்குப் பல்வேறு உபத்திரவங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வரத்தொடங்கின. பிசாசானவன், இப்போது சில நபர்களைக் கொண்டு, உபத்திரவத்தை தொடங்கியபடியால், என் அறையில் எழுந்த பயங்கர ஓசைகளை இப்போது அவன் நிறுத்திக்கொண்டான்!*

*- மேடம் குயான்*

---

## 'அவரோடு தனிப்பட்ட உறவே' மெய் ஆராதனை!

*நமது ஆண்டவர் தன்னுடைய ஊழியத்தில் 'திரள் கூட்டத்தின் நடுவில் நின்றே' எப்போதும் ஊழியம் செய்தார். அவருடைய பிரசங்கம் மிகத் தெளிவாகவும் ஆணித்தரமாகவும் தொனித்தது. அதனிமித்தமாய், அவரை கேட்கும்படி ஏராளமான ஜனங்கள் கூடிவந்தனர். ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கொண்டு செய்த அற்புதம், தேசம் எங்கும் பிரபல்யமாய் பரவிவிட்டது! 'நாங்களும் ஒரு அற்புதத்தை காணமுடியும் என்ற எதிர்பார்ப்பு' இன்னமும் அதிகமான கூட்டத்தை சேர்த்து விட்டது. கூட்டம் அதிகரித்தபடியால், நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, ஜனங்களுக்கு ஊடாய் வீதிகளில் செல்வது அவருக்கு கஷ்டமாகி விட்டது.*

**பொதுவாக, ஒரு பிரசங்கி திரள் கூட்டத்தை காண்பது அவருக்கு மிகுந்த உற்சாகமாயிருக்கும். ஆனால், இயேசுவுக்கோ, தன்னுடைய ஊழியத்தில் பரவசமடைந்த கூட்டத்தால் விளைந்த "மெய்யான நன்மை" சொற்பமாகவே இருந்தது! ஒருவேளை, தனக்கு முன்பாக கூடியிருந்த மாபெரும் கூட்டத்தை நோக்கிப் பார்த்து "கோதுமைக்கு முன் பதர் எம்மாத்திரம்?" (எரே.23:28) என கூறியிருக்கக்கூடும்.**

*ஏனெனில் 'போரடித்த தானிய களத்தில்' குவியல் குவியலாக பதர்கள் குவிக்கப்பட்டிருந்ததை இயேசு கண்டிருந்தார். எப்படியெனில், இயேசுவுடைய மரணத்திற்குப் பிறகு 'ஆவிக்குரிய ரீதியாக' மனம் மாற்றமடைந்து அவரை ஏற்றுக்கொண்டவர்கள் வெகு குறைவாய்*

*இருந்ததையே சீஷர்களும் கண்டிருந்தார்கள்.*

*உண்மைதான், அநேகர் அழைக்கப்பட்டிருந்தும் 'தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ' வெகு குறைவாய் இருந்ததை 'இயேசுவின் உயிர்த்தெழுதல் பிறகு' சீஷர்கள் கண்ணார கண்டு விட்டனர்! (மத்.22:14). அழைக்கப்பட்டவர்களில் 'தெரிந்து கொள்ளப்பட்டவர்களை' இயேசு எவ்வாறு தேர்ந்தெடுக்கிறார்? யாரோ ஒரு நபர் தேவனால் மெய்யாகவே* **ஆசீர்வதிக்கப்படும்போது,** *அது நம் இரட்சகருடைய இதய நாடியை தொடுவதாகக் கண்டு, அதை அவர் கணக்கில் வைத்துக்கொள்கிறார். எனவேதான், தன்னிடமிருந்து வல்லமை புறப்பட்டு ஒரு வியாதியஸ்தனை சுகமாக்கியிருந்தால், அதைக் குறித்து இயேசு அறியாதிருக்கமாட்டார். அதற்கொப்பாகவே, தன் ஊழியத்தில் வல்லமை புறப்பட்டு 'ஒரு பாவியான* **ஆத்துமாவை இரட்சிப்பதையும்'** *அவர் அறியாதிருக்க மாட்டார்!*

**ஆகவேதான், திரள்கூட்டம் இரட்சகரை சூழ கூடியிருந்தாலும், அவர்களைக் குறித்து அவர் ஒன்றும் கூறாவிட்டாலும் "யாரோ ஒருவர்" (Somebody) அவரைத் தொட்டதை இயேசு அறிந்தார். ஒரு கூட்டம் வந்தது..... ஒரு கூட்டம் சென்றது! ஆனால், அவர்கள் யாரைக் குறித்தும் 'எந்த பதிவும்' இயேசு செய்யவில்லை.**

*சமுத்திர கரையின் மீது பெரிய அலை மோதினாலும், அது திரும்பிச் சென்றவுடன், அலையின் சிறிய சுவடுகளே காணப்படும்! அதுபோலவே, திரளான ஜனங்கள் இரட்சகரை சூழ வந்து திரும்பிச் சென்றவுடன், அவரிடமிருந்த அற்புதமான வல்லமையை 'யாரோ ஒரு சிலர் மாத்திரமே' அவரைத் தொட்டு பெற்றார்கள்!*

*இவ்வாறாகவே, ஞாயிற்றுக் கிழமை ஆராதனைக்கு சபைக்கு வரும் ஜனங்கள் 'சமுத்திர திரள் போன்று' வந்தாலும், அவர்கள் அனைவரும் வந்த விதமாகவே திரும்பிச் சென்று விடுகிறார்கள். அங்குமிங்குமாக 'யாரோ சிலர்' தங்கள் பாவத்தை உணர்ந்து அழுகிறார்கள்! 'யாரோ சிலர்' கிறிஸ்துவுக்குள் களிகூருகிறார்கள்! ஆம், யாரோ சிலர் மாத்திரமே "அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தை தொட்டு பூரண சுகமடைந்தேன்!" என்ற மகிழ்ச்சியான சாட்சி கூறுகிறார்கள் (லூக்கா 8:44). அவரைத் தேடுகிற திரள் கூட்டத்தில்* **'யாரோ இந்த சிலரை'** *தேவன் கண்டு கொள்வாராக! சகல துதியும் அவருக்கே உண்டாகட்டும்!*

*இதை வாசிக்கும் தேவனுடைய பிள்ளையே, நாம் கிறிஸ்துவோடு 'தனிப்பட்ட தொடர்பு' பெறும் வரை திருப்தி கொள்ளவே கூடாது! 'யாரோ ஒரு ஸ்திரீ' இயேசுவை அவரது வஸ்திர தொங்கல்*

மூலமாய் தொட்டதைப்போலவே நாமும் அவரை 'தொட்டு' தேவனை அனுபவிக்கிறவர்களாயிருக்க வேண்டும். இதன் மூலம் வரும் விளைவுதான் "அவரிடமிருந்து வல்லமை புறப்பட்டு" நாம் ஆசீர்வதிக்கப்பட முடியும் (லூக்கா 8:47). மேலும், இவ்வாறு நாம் ஆசீர்வதிக்கப்படுவதை கிறிஸ்துவும் அறிந்திருக்கிறார்.

**முடிவாக இயேசு செய்ய விரும்புவதெல்லாம் "அவரோடு தொட்டு தொடர்புகொண்ட நம்மை வைத்து, இந்த உலகத்திற்கு நம் மூலமாய் சாட்சி பகருவார்!".**

ஆகவே, நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவோடு 'தனிப்பட்ட உறவு கொண்டு வாழ்வதை' நம் ஜீவியத்தின் நோக்கமாய் கொண்டிருப்போமாக! திரளான ஜனங்கள் அவரைச் சூழ்ந்து நெருக்கியிருப்பதைப்போலவே, இன்று பெரும்பாலான கிறிஸ்தவ கூட்டங்கள் உள்ளன! அது அவர்களுக்கு ஒரு வழக்கமான, பாரம்பரிய கூட்டமாகவே இன்றும் இருந்து வருகிறது. ஜனங்களில், குறிப்பாக கிறிஸ்தவ ஜனங்கள் 'திரள்கூட்டத்தை' பரவசமாய் எண்ணுகிறார்கள். ஆகவேதான், திரள்கூட்டத்தைப் பார்த்து, **தன்னைப் பின்பற்றி வரும்படியான** இடுக்கமான வாசலை காண்பித்தவுடன், அநேகர் பின்தங்கி சென்றுவிட்டார்கள்!

இதுபோன்றவர்கள், தாங்கள் ஏன் சபை ஆராதனைக்கு செல்லுகிறோம் என்றுகூட அறியாதிருக்கிறார்கள். தாங்கள் சபை ஆராதனைக்குச் செல்லவில்லையென்றால் 'அது தவறு' என்ற எண்ணத்தைப் பெற்றிருக்கிறார்கள். ஒரு நிலைக் கதவின் 'கீலின் மேல்' நின்று ஆடிக்கொண்டிருக்கும் கதவைப்போலவே, எந்த நோக்கமும் இல்லாமல் தங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையை வைத்திருக்கிறார்கள். அவர்களின் ஆராதனை, ஆத்துமத்திற்குள் பிரவேசிக்க முடியவில்லை. இதுபோன்றவர்களே "பிரசங்கம் சுருக்கமாய் இருந்தால் மகிழ்ச்சி அடைகிறார்கள்" இல்லையென்றால், அது அவர்களுக்கு சலிப்பை ஏற்படுத்துகிறது.

**சீக்கிரத்தில் கூட்டம் முடிந்து, ஆராதனைக்கு கூடி வந்த ஜனங்களோடு வீட்டு விஷயம், வியாபார விஷயம், அரசியல் விஷயம், சபையை புறங்கூறுதல்..... போன்றவைகளை அளவளாவி பேசி செல்லுவதற்கு இவர்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள். ஆனால், ஆண்டவராகிய இயேசுவிடம் நெருங்கிச் செல்லும் பாக்கியத்தை, சபைக் கூட்டத்தில் இவர்கள் பெற்றதேயில்லை!**

இவர்கள் கூட்டத்திற்கு வந்தார்கள், போனார்கள்! தங்கள்

*ஜீவியத்தின் கடைசி நாள்மட்டும் வந்து சென்ற இவர்கள் "நித்திய பேரானந்த பரம தேசத்திற்குள் பிரவேசிக்கும் கிருபையை இழந்தோம்!" என்பதை கடைசி நாளில் அறிந்து அதிர்ச்சியடைவார்கள். சபையில் கிறிஸ்து தங்களுக்கு பிரசங்கிப்பட்டும் அவரை புறக்கணித்துவிட்டோமே.... என, இனிமேல் வருந்தி பயன் ஏது? சகலத்திற்கும் நீதிபதியானவரை 'காண்பதற்கு கூட' வெட்கம் அடைவதே, இவர்களின் பங்காய் மாறி விடுகிறது! ஓ தேவ ஜனமே, நாம் விழித்துக்கொள்வோமாக. அவரோடு தனிப்பட்ட உறவு இல்லாத நம் ஜீவியமோ, சபை ஜீவியமோ, ஊழியமோ 'வீண்' என்பது மாத்திரம் அல்ல.... அது, பெரும் நஷ்டம் என்பதை அறிவோமாக!*

*- சார்லஸ் ஸ்பர்ஜன்*

---

## 'இயேசுவின் ஊழியம்' பிதாவை மகிமைப்படுத்தியே இருந்தது!

*தேவன் அவரிடம் பேச, அவர் மனுஷரிடம் பேசினார்! "என் உபதேசம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பினவருடையதாயிருக்கிறது. என் உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறது. நான் அவரிடத்தில் கேட்டவைகளையே உலகத்துக்குச் சொல்லுகிறேன். ஆகையால் நான் பேசுகிறவைகளைப் பிதா எனக்குச் சொன்னபடியே பேசுகிறேன்.* **நான் சுயமாய் பேசவில்லை.** *நான் பேச வேண்டியது இன்னதென்றும் உபதேசிக்க வேண்டியது இன்னதென்றும் என்னை அனுப்பின பிதா எனக்குக் கட்டளையிட்டார்" என இயேசு ஆணித்தரமாகக் கூறினார்!*

*அவர் ஜீவியத்தில் தமது சுய இஷ்டமாய் நடவாமல் முற்றிலும் தேவசித்தத்திற்கே கீழ்ப்படிந்து நடந்ததுபோல, தமது உபதேசத்திலும் பேச்சிலும்* **சுயமாய் ஒன்றும் செய்யாமல்** *தேவன் தமக்குச் சொன்னவைகளையே உலகத்துக்குச் சொன்னார். ஆகவேதான், மனுஷீகத்தில் விளங்கிய அவரது உபதேசம், தெய்வீகமுள்ளதென்று காண்கிறோம்!*

*அவர் நடப்பித்த ஒவ்வொரு கிரியைகளிலும், அற்புதங்களிலும் தேவ கரத்தைக் காண்கிறோம். பார்வைக்கு அவர்தாமே செய்கிறதுபோல் தோன்றுகிறது. ஆகிலும் அவைகள் தேவ கிரியைகளே! அவரது பரிசுத்த ஜீவியம், தேவ சித்தத்திற்குப் பூரணமாய் கீழ்ப்படிந்து நடந்த பலன்! அவர் உபதேசங்கள், பிதா பேச, கேட்டுப் பேசினவை! அதுபோலவே அவரது கிரியைகளும், பிதா அவரைக்கொண்டு செய்த கிரியைகளே!*

அவருக்குள் வல்லமையிருந்தபோதிலும், தமது இஷ்டப்பிரகாரம் எந்த அற்புதத்தையும் அவர் செய்தவரல்ல. மற்றவர்கள் தங்கள்

**இஷ்டம்போல் அவரை அற்புதம் செய்யும்படி கேட்டபோது அவர்களைக் கடிந்துகொண்டார்!**

*தாம் செய்த கிரியைகளைக் குறித்து "நான் சுயமாய் ஒன்றும் செய்கிறதில்லை; என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவே இந்தக் கிரியைகளைச் செய்து வருகிறார்" என்றார். பிசாசின் பெலத்தினாலே அவர் அற்புதங்களைச் செய்தாரென்று சத்துருக்கள் சொன்னபோது, "அப்படியல்ல நான்* **தேவனுடைய வல்லமையினாலே** *இவைகளைச் செய்கிறேன்" என்றார்.*

*லாசரு கல்லறையில் "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனும்" என்று அவர் சொன்னபோது எல்லாருடைய கண்களும் அவரை நோக்கின. அவர் ஓர் அதிசயத்தைச் செய்யப் போகிறதாகத் தோன்றினது! அவரோ, தமது கண்களை ஏறெடுத்து: "பிதாவே! நீர் எனக்குச் செவிகொடுத்த படியினால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். நீர் எப்பொழுதும் எனக்குச் செவி கொடுக்கிறீர் என்று அறிந்திருக்கிறேன்" என்று சொல்லி, மரித்தவனை உயிரோடே வரும்படி கட்டளை யிட்டார். இந்த இரகசியத்தை அறியாத மனுஷர், இந்த வல்லமை இவருக்கு எப்படி வந்ததென்றும்? இவைகள் சாத்தானுடைய செயல்களென்றும், இப்படிப்பட்ட கிரியைகளைச் செய்து உலகத்தை இழுத்துக்கொள்ளப் பார்க்கிறாரென்றும் பலவிதமாய் பேசி நாசமானார்கள்!*

*திமிர்வாதக்காரனை அவர் நடக்கச் செய்த சமயத்தில், மனுஷனுக்கு இப்படிப்பட்ட அதிகாரத்தைக் கொடுத்த தேவனை மகிமைப்படுத்தினார்கள்! "ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டானென்று" நிக்கொதேமு சொன்னார். ஆகையால், அவர் செய்த கிரியைகள் முற்றிலுமாய் தன் பிதாவாகிய தேவனை மகிமைப்படுத்துவதாகவே இருந்தது!*

**கிறிஸ்துவில் தேவசித்தம் பரிபூரணமாக நிறைவேறியதற்கு ஒரே காரணம், தேவன் இவர் மூலமாய் மகிமையடைந்தார் என்பதுதான்!** *"பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன், நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன்" என்றார். இவ்வாறு தேவசித்தமும் தேவ ஞானமும் தேவ வல்லமையும் "ஜீவநதி போல்" தாராளமாய் இவர் மூலமாக வெளிப்பட்டதற்கு, இயேசு எல்லாவற்றிலும் தன்* **பிதாவின் மகிமை** *ஒன்றை மாத்திரமே தேடினார், என்ற இரகசியமேயாகும்!*

*- பரமானந்தம் ஐயர்*

## ‘ஆளுகை’ அதிகாரமா? சத்தியமா?

அதிகாரமுள்ள யாவருக்கும் கீழ்ப்படிய, அவர்களை கனம் பண்ண நாம் கட்டளை பெற்றிருக்கிறோம்! (1பேதுரு 2:14,17). இயேசுவின் சீஷர்கள், அவ்வாறே பிசகின்றி ஆளுகைக்கு அடங்கி, அவர்களை கனம் செய்து நடப்பார்கள்! ஆகிலும், உண்மையான சீஷர்களாகிய நம்மை, மூப்பர்கள், பிரதான ஆசாரியர்களைக் கொண்ட ‘ஆலோசனை சங்கத்திற்கோ’ அல்லது உலக அதிபதிகளுக்கு முன்போ **குற்றம் சாட்டப்பட்டு** ஒப்புக்கொடுக்கப்படுகையில், அவர்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்றும், அச்சமயத்தில் அவர்களுக்கு முன்பாக **“எனக்கு சாட்சியாய் இருங்கள்!”** என்றும் இயேசு தன் சீஷர்களுக்குப் போதித்தார்! (மத்.10:17,18).

**பகையும், தீது மொழிகளும் ஆளுகையில் உள்ளவர்கள் உங்களுக்கு எதிராகக்கூறும்போது, அவரது சீஷர்களாகிய நாம் வெளிப்படுத்த வேண்டிய முதல் சாட்சியே “அவர்களுக்குப் பயப்படாதிருங்கள்!” என இயேசு கூறிய தைரிய விசுவாசமேயாகும்! (மத்.10:25,26).**

ஏனெனில் “உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது..... அவைகளில் ஒன்றாகிலும் தரையிலே விழாது!” என இயேசு தந்த வாக்குதத்தமே நமது விசுவாசத்திற்கு ஆதாரமாயிருக்கிறது! (வச.29,30).

இயேசு தன் சீஷர்களுக்கு கூறியபடியே, குருவாகிய அவருக்கு திருஷ்டாந்தமாய் சம்பவித்தது! 30-வெள்ளிக்காசிற்காக ‘காட்டிக் கொடுத்தவன் மூலமாய்’ இயேசு ஒரு கள்ளனைப்போல் பிடிக்கப்பட்டு, அதிகாரமுள்ள பிரதான ஆசாரியர், மூப்பர் சங்கத்தார் முன்பாக நிறுத்தப்பட்டார்! அவரைக் கொன்றுவிடத் துடித்த அவர்கள், பல பொய் சாட்சிகளைத் தேடியும், அது ஒவ்வவில்லை! முடிவில், 2-பொய் சாட்சிகள் கூறப்பட்டபோது “உனக்கு விரோதமாய் இவர்கள் சாட்சி சொல்லுகிறதைக் குறித்து நீ ஒன்றும் சொல்லுகிறதில்லையா?” என பிரதான ஆசாரியன் கேட்டார். **அவர்களின் உள்நோக்கத்தை அறிந்துகொண்ட இயேசு** “எதுவும் பேசாமலிருந்தார்” (மத்.26:59-63). ஆனால், பிரதான ஆசாரியன் “நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா?” என கேட்ட சமயத்தில் ‘ஆம்’ என கூறினால், பகை வெடிக்கும் என இயேசு அறிந்திருந்திருந்தார். ஆகிலும் “நீர் சொன்னபடிதான்!” என கூறியது, தன் பிதாவுக்கு முன்பாக செய்த நல்ல சாட்சி அன்றோ! அது ஏனென்றால், அவர் தன் பிதாவின் சர்வ வல்லமையை விசுவாசித்தே அவ்வாறு தைரிய அறிக்கை செய்தார் என, மத்தேயு 26:63,64 பறைசாற்றுகின்றது!

**அதிகாரத்திற்கு அஞ்சாமல், சத்தியத்திற்கு சாட்சி கொடுத்த நம் குருவிற்கே ஸ்தோத்திரம் உண்டாவதாக! இதனிமித்தம், இயேசுவின் முகத்தில் துப்பினார்கள்! குட்டினார்கள்! கன்னத்தில் அறைந்தார்கள்! ஆகிலும், இயேசுவுக்கோ "சத்தியத்திற்கு சாட்சி பகர்ந்ததே!" மேலானதாய் இருந்தது!! (வச.67). முடிவில், பிரதான ஆசாரியரும் மூப்பரும் 'ஜனங்களை ஏவி விட்டு' இயேசுவை சிலுவையில் அறைய தங்கள் நோக்கத்தை பூர்த்தி செய்தார்கள்! (27:20-22).**


*மேலும், பிலாத்து முன்பாக இயேசு கட்டப்பட்டு நின்றபோது "உன்மேல் எத்தனையோ குற்றங்களை சாட்டுகிறார்களே, நீ அவைகளைக் கேட்கவில்லையா?" என கேட்டான். இயேசுவோ "ஒரு வார்த்தைகூட மாறுத்தரமாகச் சொல்லவில்லை!" (மத்.27:13,14). ஆனால் "நீ ராஜாவோ?" என கேட்ட அடுத்த கணமே "நீர் சொல்லுகிறபடி, நான் ராஜாதான்!" என கூறினார்! ஒரு தேசாதிபதிக்கு முன்பாக இப்படிக்கூறினால், அவருக்கு கோபம் உண்டாகும் என அறிந்தும் தைரியமாய் அறிக்கை செய்தார்! மேலும், தேவ ராஜ்யத்திற்குரிய 'சத்தியவான்' எவனும் என் சத்தம் கேட்கிறான்! என கூறியதும்,* "**சத்தியத்திற்கு சாட்சி கொடுக்கவே நான் பிறந்தேன்!**" *என கூறியதும், அவரது உன்னத சாட்சி அன்றோ! (யோவான் 18:37).*

*இன்னும் அதிகமாய் "நீ எங்கேயிருந்து வந்தவன்?" என்ற பிலாத்துவின் கேள்விக்கு, இயேசு மாறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை என யோவான் 19:9-ம் வசனத்தில் வாசிக்கிறோம். ஆனால், அதற்குரிய ஓங்கிய பதிலை, பிலாத்துவின் அடுத்த கேள்விக்கு முன்பாக மகா தைரியமாய் முழங்கினார்! அந்த வசனத்தில், பிலாத்து "உன்னைச் சிலுவையில் அறைய* **எனக்கு அதிகாரமுண்டென்றும்,** *உன்னை விடுதலை பண்ண* **எனக்கு அதிகாரமுண்டென்றும்** *உனக்குத் தெரியாதா?" என தன் அதிகாரத்தை வைத்து பயமுறுத்தும் தொனியில் கேட்டார்! அதற்கு இயேசு கூறிய பதில், கெம்பீர தொனியாக இருந்திருக்கும் என்றே யூகிக்க முடிகின்றது. அவர் உரைத்தார்: "பரத்திலிருந்து உமக்கு கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது!" என, தன் பிதாவின் அதிகாரத்தை பறிக்க எண்ணிய தேசாதிபதிக்கு முன்பாக கெம்பீரித்தார்! (யோ. 19:10,11).*

*அப்பழுக்கற்ற நம் குருவின் மாதிரி, நம் உள்ளத்தை கொள்ளை கொள்வதாக! எந்த ஆளுகையாய் இருந்தாலும், அது சத்தியத்திற்கு பங்கம் விளைவித்தால், 'யூத பாலசிங்கமாய்' இயேசுவைப்போல் கெம்பீரிக்க, இக்கடைசி நாட்களில் நம் யாவரையும் தேவன், பெலப்படுத்தி நிலைநிறுத்துவாராக, ஆமென்!*

*- T.ரத்தினகுமார்*

## தியாக சுடராய் வாழ்ந்த,
# பக்த்சிங்!



தன் அழைப்பைக்குறித்து பக்த்சிங் கூறும்போது, "எனது வாலிப பிராயத்தில், பக்த்சிங் ஆகிய நான் ஒரு இன்ஜினியராகிப் பணம் சம்பாதித்து, பணத்தை தேவனுக்கு கொடுப்பதே எனது வாஞ்சையாய் கொண்டிருந்தேன். ஆண்டவரோ, "எனக்கு உன் பணம் வேண்டாம், நீதான் எனக்கு வேண்டும்!" என்றார். 1932-ம் ஆண்டு ஏப்ரல் 4-ம் தேதி, அதிகாலை 2.30 மணியளவில், ஆண்டவருடைய அழைப்பிற்கிணங்கி எனது முழு வாழ்க்கையையும் ஊழியத்திற்கே அர்ப்பணம் செய்தேன். ஆண்டவரோ "முதலாவது பஞ்சாப்பிலுள்ள உனது சொத்துக்கள் யாவற்றின் மேலுள்ள உனது உரிமையை நீ விட்டு விடவேண்டும். ஒருபோதும் ஒரு மனிதனிடத்திலும் உன்னுடைய தேவைகளைப் பற்றிச் சொல்லவோ, ஆலோசிக்கவோ கூடாது. இரண்டாவதாக, எந்த ஒரு கிறிஸ்தவ ஸ்தாபனத்துடனும் ஒருபோதும் நீ சேர்ந்து கொள்ளக் கூடாது. மூன்றாவதாக, ஒருபோதும் உனது சொந்த திட்டத்தை தீட்டக்கூடாது! என்பதே அந்த மூன்று நிபந்தனைகள்!" நான் இந்த மூன்று நிபந்தனைகளையும் ஏற்றுக் கொண்டேன் என்றார்.

அதன்பின், சுவற்றின் மேல் தொங்கிக் கொண்டிருந்த இந்திய தேசப்படத்தை அவர் கண்டார். அதிலிருந்து வந்த ஒரு சத்தத்தை அவர் கேட்டார்: "நீ எனக்கு ஊழியம் செய்ய விரும்பினால், சிலுவையில் உன் வாழ்க்கையை அர்ப்பணம் செய்" என்பதே அந்த தேவ சத்தம். அந்த தேவ குரலுக்கும் கீழ்ப்படிந்தவராக தனது வாழ்க்கையை சிலுவையில் தத்தம்செய்தார். அந்த நாள் தொடங்கி கிறிஸ்துவின் பணிக்காக தேவன் ஒரு பெரிய திட்டத்தை இந்தியாவில் தனக்கு வைத்திருக்கின்றார் என்பதை அவர் ஆழமாக உணர்ந்தார். "சீக்கிய மதமா? அல்லது கிறிஸ்தவ மதமா? இவை இரண்டில் ஒன்றை தெரிந்து கொள்!" என அவரது குடும்பம் வெகுண்டு கேட்டது. அவர் கிறிஸ்தவத்தை தெரிந்து கொண்டபோது, அவருக்கு கிடைத்த பதில், வீட்டைவிட்டு துரத்தியடிக்கப்பட்டார்!

97வயதினரான சகோதரன் பக்த்சிங் எல்லா காலத்துக்குமுரிய தேவஊழியராய் இருந்தார்! 17-9-2000 ஆம் ஆண்டு காலை 6 மணிக்கு ஐதராபாத்திலுள்ள "எபிரோன்" என்ற தமது இருப்பிடத்தில், தனது அன்பின் ஆண்டவருடைய பரம இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தார்.

2000-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20-ம் தேதி ஆந்திர மாநிலம் ஐதராபாத் பட்டணத்திலுள்ள நாராயணாகுடா கல்லறைத் தோட்டத்தை 6-லட்சம் மக்கள் கொண்ட மனித கடலானது சற்றும் இடைவெளியில்லாமல் முற்றுகையிட்டிருந்தது.

மேற்கண்ட தேவமனிதரின் பெயருக்கு முன்பதாக டாக்டர் (பண்டிதர்) அல்லது பாஸ்டர் அல்லது ஆயர் அல்லது பேராயர் அல்லது பெரும்பேராயர் என்ற எந்த ஒரு பட்டங்களும் கிடையாது என்பதை நாம் நன்கு கவனிக்க வேண்டும். சகோதரன். பக்தசிங் என்றே அவர் அன்பொழுக அனைவராலும் அழைக்கப்பட்டார்!

- நிரூபித்து வாழ்ந்த கிறிஸ்துவின் தாசர்கள்

## வாலிபனே, துன்பத்தில் அஞ்சாத வாழ்க்கை இயேசுவில் உண்டு!

ஒரு அடி உயரத்திற்கும் சற்று உயரமான ஒருவித அதிசய வெள்ளாடுகளை திபெத் நாட்டு லூநாக் நதிக்கரையில் நான் கண்டேன். மிகவும் செங்குத்தான, உயரமான மலைப்பாறையின் உச்சியில் இந்த ஆடுகளில் சில நின்றுகொண்டு, தங்களுக்கே உரித்தான பாணியில் துள்ளித் துள்ளி விளையாடிய பாங்கினைக் கண்டு வியப்படைந்தேன். ஒவ்வொரு சமயமும் பாறையின் மகா பயங்கரமான விளிம்பினுக்கே அவைகள் வர ஆசைப் படுவதையும், அந்த விளிம்பிற்கு வந்ததும் அங்கிருந்து ஒரு துள்ளல் போட்டுக்கொண்டு ஓடுவதையும், திரும்பவும் அது பாறையின் விளிம்பிற்கு வருவதையும் அங்கிருந்துகொண்டு செங்குத்தான பூமியை எட்டிப்பார்த்து மகிழுவதையும், மறுபடியும் தங்கள் பின்னங்கால்கள் இரண்டையும் உயரத் தூக்கி ஒரு துள்ளல் போட்டுக்கொண்டு ஓடிச் செல்லுவதையும் கண்டு மிகவும் வியப்படைந்தேன்!

மேற்கண்ட ஆடுகளைப்போலத்தான் தேவன் தம்முடைய பிள்ளைகளாகிய நமக்கும் அற்புதமான பாதங்களையும், நடுக்கமடையாத வலுவான கால்களையும் அளித்திருக்கின்றார். ஆம், "அவர் என் கால்களை மான் கால்களைப் போலாக்கி உயரமான ஸ்தலங்களில் என்னை நடக்கப் பண்ணுவார்" (ஆப.3:19). நம்முடைய ஜீவிதப் பாதை முழுவதும் இடர்களும், இன்னல்களும், கண்ணீர்களும் நிறைந்த செங்குத்தான மலைப் பாறைகள்தான். ஆனால் நாம் அவற்றைக் குறித்து அஞ்சத் தேவையில்லை! அதுதான் மெய்யான தேவப் பிள்ளைகளாகிய நம் ஒவ்வொருவரின் பாதையுமாகும் (அப்.14:22). 'அதைக் கண்டதும்' கர்த்தருக்குத் துதி செலுத்தி அவர் மார்பில் சாய்ந்துகொண்டு, ஆனந்தக் களிப்புடன் முன்நோக்கிக் கடந்து செல்ல வேண்டியதுதான்! தங்களுக்கு முன்னாலுள்ள மரணப் பள்ளத்தாக்கைக் கண்ட அந்த ஆடுகள் பயந்து நடுங்கவில்லை. மாறாக, களிகூர்ந்து குதித்து மகிழ்வுற்றன. நாமும் தேவ பெலத்தால் அப்படிச் செய்வதையே கர்த்தர் விரும்புகின்றார்.

ஓ வாலிபனே, ஒரு காட்டு வெள்ளாட்டிற்கு 'அச்சமில்லாத வாழ்வு' தரும் ஆண்டவர், உனக்கு சொந்தமாக வேண்டாமா? 'பாவமும்' 'பயமும்' இரட்டையர்கள்! இன்றே இயேசுவை விசுவாசித்து 'பயமில்லாத' வாழ்க்கை வாழ உன்னை ஒப்புக்கொடு!

– சுவிசேஷ மலர்

Published and Owned by:
MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society,
*Editor* T.Rathnakumar, Madurai.
Printed by SFA Print (P) Ltd., Sivakasi.